மகாராஷ்டிராவில் 4 ஆண்டுகளில் 4 வகையான கட்சித் தாவல்கள்!

பாட்னா எதிர்க்கட்சிகளின் கூட்டம் பி.ஜே.பி.யின் வயிற்றில் புளியைக் கரைக்கிறது!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜூலை 6 - எதிர்க்கட்சிகளில் இருந்தால் ஊழல்வாதிகள்; பி.ஜே.பி.க்கு வந்தால் 'புனிதர்' கள் என்னும் பி.ஜே.பி.யின் போக்கு நாகரிகமற்றது என்றும், வரலாற்றில் சர்வாதிகாரிகள் காணாமல் போனது போன்றே பி.ஜே.பி.க்கும் நாளை நடக்கும் என்றும் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

கடந்த இரண்டு நாள்களாக மகாராட்டிர மாநிலத்தில் நடந்துவரும் அரசியல் கட்சித் தாவல்கள் ஜனநாயகத்தையே கொச்சைப்படுத்திடும் அருவருக்கத்தக்க அரசியல் அநாகரிகத்தின் உச்சமாகும்.

மகாராட்டிராவில் 4 ஆண்டுகளில் நான்கு வகையான ஆட்சிகள் 4 ஆண்டுகளில் 4 பதவியேற்புகள்; நாலு வகையான ஆட்சி 'அவதாரங்கள்!' இதற்கு மூலகர்த்தா ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் அரசியல் பிரிவான பா.ஜ.க., அதன் ஒன்றிய ஆட்சி என்பது உலக அறிந்த செய்தியாகும்!

2019 நவம்பரில் (பொதுத் தேர்தல் நடந்த பிறகு) நவம்பர் 23 இல் பா.ஜ.க.வின் தேவேந்திர பட்னாவிஸ் முதலமைச்சராகவும், தேசியவாத காங்கிரசின் அஜித்பவார் துணை முதலமைச்சராகவும் பதவியேற்றனர். மூன்றே நாள்கள் மட்டுமே இது நீடித்து, பிறகு கவிழ்ந்தது!

2019 நவம்பர் 26 இல் சிவசேனாவின் உத்தவ்தாக்கரே முதலமைச்சராகவும், தேசியவாத காங்கிரசின் அஜித்பவார் துணை முதலமைச்சராகவும் பதவியேற்றனர். சிவசேனாவில் பிளவு ஏற்பட்டதால், இந்த அரசும் கவிழ்ந்தது.

கடந்த ஆண்டு ஜூன் 30-இல், சிவசேனாவி லிருந்து பிரிந்து வந்த ஷிண்டே முதலமைச்சராகவும், தேவேந்திர பட்னாவிஸ் துணை முதலமைச்சராகவும் பதவியேற்றனர்.

நேற்று முன்தினம் அஜித்பவார் துணை முதலமைச்சராகவும், அவருடன் தேசியவாத காங்கிரஸ் உறுப்பினர்கள் 8 பேரும் அமைச்சர்களாகப் பதவியேற்றுள்ளனர்.

கூடுவிட்டு கூடு பாயும் அரசியல்!

கூடுவிட்டு கூடும் பாயும் இந்த அரசியல் வித்தைகள் முடிந்துவிட்டதாகவும் நாம் முடிவுக்கு வர முடியாது; ஏனெனில், அடுத்து அமைச்சர்களின் இலாகா பிரிப்புக்குப் பிறகு இந்த வேலி தாண்டும் பேரங்கள் நடந்தால் அது அதிசயமல்ல; பொது ஒழுக்கச் சிதைவு பற்றி யாருக்கும் வெட்கமிருக்கிறதா?

இவை வெளித்தோற்றத்திற்குத் தானே நடப்பது போல் தோன்றினாலும், இந்த நாடகத்தின் "சூத்திரதாரி" இயக்குவது டில்லியே என்பது அரசியலில் சற்று விவரம் தெரிந்தவர்களுக்குத் தெரியும்.

மோடி அரசு பாசிச தாக்குதல் போன்ற அரசமைப்புச் சட்ட விதிகளை மதியாமை, கட்சிகளைப் பிளந்து 'குதிரை பேரம்' நடத்தி, மக்கள் வாக்களித்த கட்சிகளை ஆட்சி அமைக்கவிடாமல், தாங்கள் உள்ளே ஊடுருவி, பா.ஜ.க. ஆட்சிகளை மாநிலங்களில் அமைப்பது; ஒத்துவராதவர்களை வருமான வரித்துறை, சி.பி.அய்., அமலாக்கத் துறை ஆகிய 'திரிசூலத்தைக்' காட்டி, அச்சுறுத்தி பணிய வைப்பது போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தி வருவது கண்கூடு.

இதற்குப் புதுச்சேரி போன்ற சிறிய யூனியன் பிரதேசங்கள் முதல் மகாராட்டிரா போன்ற பல பெரிய மாநிலங்கள் வரை எடுத்துக் காட்டுகளாக 'பளிச்'சென்று காட்சியளிக்கின்றன.

பாட்னாவில் கூடிய எதிர்க்கட்சிகளிடம் ஒரு வித அச்சத்தை விதைத்து, வழக்குகள், கைதுகள் மூலம் திர்க்கட்சிகளை முடக்குவது போன்றவை மூலம், நமது முதலமைச்சர் சரியாக சொல்லியபடி 'நரித்தனங்களில்' ஈடுபட்டு வருகின்றது ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி.

பாட்னா ஜூரம் - பி.ஜே.பி.யின் வயிற்றில் புளி!

'பாட்னா ஜுரம் பா.ஜ.க.வை வெகுவாகப் பிடித்து உலுக்குகிறது; ஏற்கெனவே கருநாடகத் தோல்வி பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் வியூகங்களையும், வித்தைகளையும் புறக்கணித்துவிட்டு, மக்கள் ஒரு வகை அமைதிப் புரட்சியை 'ஓட்டப்பர்களாகி' செய்து காட்டியது பா.ஜ.க.வின் வயிற்றில் புளியைக் கரைத்துவிட்டிருக்கிறது.

அதனால், பிரதமர் மோடி 'தன்னிலை' மறந்து நிலைகுலைந்து குறுக்கு வழியில் தனிப்பட்ட முறையில் தாக்குதல்களைத் தொடுத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள் மீது கடுஞ்சொல் வீசுகிறார்.

'ஊழல் செய்பவர்களைத் தப்ப விடமாட்டோம்' என்று உரத்த குரலில் எச்சரிக்கிறார்; பலே பலே அந்தக் குரலின் ஒலி ஓசை அடங்கு முன்னர், அஜித்பவார் போன்றவர்களுக்கு ஊழல் வழக்கு அமலாக்கத்துறை பாய்ச்சல் எல்லாம் மாறி, துணை முதலமைச்சராக மூன்றாவது முறை அவரை பதவியேற்க வைத்து - சரத்பவாரின் கட்சியை பலவீனப்படுத்தி, அக்கட்சியை உடைப்பதற்கு சகலவிதமான முறைகளையும் கையாளுகின்றனர்.

எதிர்க்கட்சிகளில் இருந்தால் ஊழல்வாதிகள், பி.ஜே.பி.,க்கு வந்தால் 'புனிதர்'களா?

எதிர்க்கட்சியில் இருந்தால் "ஊழல்வாதிகள்" வழக்குகள்; பா.ஜ.க. ஆதரவு நிலைப்பாட்டுக்கு அவர்கள் மாறிவிட்டால், படமெடுத்தவர் பெட்டிப் பாம்பாக மாறி, குற்றவாளிகளை 'புனிதர்'களாக்கிய புளகாங்கிதத்தோடு உலவுகிறார்கள்.

காங்கிரஸ் செயலாளர் ஒருவர், "பா.ஜ.க. ஒன்றிய அரசு ஒரு லாண்டரி மிஷனாகி, சில சோப்புகளைப் (Detergents) போட்டு, அந்த ஊழல் கரைகளை உடனடியாகப் போக்கி, 'புனிதர்'களாக அவர்கள் அவதாரம் எடுக்க வாய்ப்புகளை உருவாக்கிவிடுகின்றனர்" என்றார்.

தமிழ்நாட்டில் கட்சித் தாவல்கள் பேரங்கள் பலிக்காது!

தமிழ்நாட்டில் பெரியார் மண்ணில் இந்த கட்சித் தாவல், அரசியல் பேரங்கள் செல்லாது என்பதால், 'திரிசூலங்கள்' பாய்ச்சப்படக்கூடும் என்பதால், ஆளும் கட்சியான தி.மு.க., அதன் தலைவர், அவற்றை எதிர்கொள்ளும் அளவிற்கு மக்கள் பலம் பேராதரவின் மூலம் ஜனநாயகத்தையும், அரசமைப்புச் சட்டத்தையும், சமூகநீதியையும், மாநில உரிமைகளையும் காப்பவராக உறுதியான முடிவின் உண்மைப் போராளி தலைவராக எதிர்கொள்ளும் பக்குவம் பெற்றவராக உள்ளார்.

பழைய நெருக்கடி காலத்தில் (Emergency) அனுபவித்த கொடுமைகள் என்ற நெருப்பாற்றில் நீந்திய வர்களுக்கு, இந்த அச்சுறுத்தலும், அடக்குமுறை அம்புகளின் ஏவுவதல் எவையாயினும் அதனைக் களப்பணி, அறிவுப் பணி, உறுதியான உத்திகள்மூலம் வென்று காட்டி, வீர வரலாறு படைத்துக் காட்ட முடியும்.

வரலாற்றில் காணாமற்போன சர்வாதிகாரிகள்!

அரசமைப்புச் சட்டத்தின் முதல் சொற்றொடரே, 'We the People' என்றுதான் தொடங்குகிறது. இந்த மக்களதிகாரம் முன்பு, மற்ற அதிகாரங்கள் இறுதியில் தோல்வி அடைவது உறுதி! சர்வாதிகாரிகள் வரலாற்றிலிருந்து காணாமற்போய் இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டத் தேவையில்லை.

இவ்வாறு கி.வீரமணி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட எட்டயபுரத்தில் நடைபெற்ற மாபெரும் இரட்டை மாட்டு வண்டி எல்கை பந்தயத்தை தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளருமான கனிமொழி கருணாநிதி துவக்கி வைத்தார். உடன், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளருமான பெ.கீதா ஜீவன், சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன்,புதூர் மத்திய ஒன்றியச் செயலாளர் ராதாகிருஷ்ணன், நவநீதகண்ணன், மும்மூர்த்தி, செல்வராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

வனவிலங்குகளை மின் விபத்திலிருந்து பாதுகாக்க நடவடிக்கை!

தமிழ்நாடு அரசின் புதிய விதிமுறைகள் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 6 - வனவிலங்குகளைப் பாதுகாப்பதில், தமிழ்நாடு அரசு அதீத ஈடுபாடு காட்டி வருகிறது. இந்நிலையில், உயர் மின்னழுத்த மின் வேலிகளால், மின்விபத்து ஏற்பட்டு, வன விலங்குகள் குறிப்பாக, யானைகள் மின் சாரம் தாக்கி உயிரிழக்கும் நிகழ்வுகள் ஏற்படுகின்றன. எனவே வனவிலங்குகளைப் பாதுகாப்பதற்கு, மின் வேலிகளை அமைப்பதற்கான தரப்படுத்தப்பட்ட அளவுகோலுடன் கூடிய விதிமுறைகளை நிர்ணயிப்பது இன்றியமையாததாகி விட்டது. அதே வேளையில், காடுகளை ஒட்டியுள்ள பகுதிகளில், வனவிலங்குகளால் சேதமடையும் விவசாய விளைபொருட்களைப் பாதுகாப்பதன் மூலம் விவசாயிகளின் நலனைப் பேணுதலும் முற்றிலும் அவசியமாகிறது. விவசாயிகள் தங்கள் பயிரை பாதுகாப்பதற்கு தரப்படுத்தப்பட்ட கீழ்க்கண்ட விதிமுறைகள் உதவும்.

முதல் முயற்சியாக, தமிழ்நாடு அரசு தமிழ்நாடு மின்வேலிகள் (பதிவு மற்றும் ஒழுங்குமுறை) விதிகள் 2023-ஐ அறிவித்து அரசிதழில் (03.07.2023) அறிவிக்கை செய்துள்ளது. இது சூரியசக்தி மின்வேலிகள் உள்ளிட்ட மின்வேலிகள் அமைப்பதையும், விவசாய நிலங்களைச் சுற்றி ஏற்கனவே அமைக்கப்பட்ட மின்வேலிகளைப் பதிவு செய்வதையும், தரப்படுத்தவும், ஒழுங்குபடுத்தவும் வழிவகுக்கும்.

அரசு அறிவிக்கை செய்துள்ள விதிகளின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

சூரியசக்தி மின் வேலிகள் உள்ளிட்ட மின் வேலிகள் அமைக்க முன் அனுமதி பெறுவது கட்டாயமாகிறது. ஏற்கனவே அமைக்கப்பட்ட மின்வேலிகளை பதிவு செய்வதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்த விதிகள், தமிழ்நாடு அரசால் அறிவிக்கை செய்யப்பட்ட காப்புக்காடுகளிலிருந்து 5 கி.மீ தொலைவில் உள்ள விவசாய நிலங்களுக்கு மட்டுமே பொருந்தும். மின் வேலிகளை அமைக்கும் வணிகத்தில் உள்ள அனைத்து நிறுவன மின்வேலிகளும், இவ்விதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள BIS தரநிலைகளான BIS3022 76 (இந்தியா) விதிமுறைகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும்.

அறிவிக்கை செய்யப்பட்ட, காப்புக்காட்டின் வனப் பகுதியிலிருந்து 5 கிலோமீட்டர் தொலைவுக்குள் ஏற்கெனவே மின்வேலிகளை அமைத்திருப்பவர்கள், தங்கள் வேலிகளை சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலரிடம் பதிவு செய்வது இனி கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

நிபந்தனைகள் கடைப்பிடிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக, தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் வனத்துறை அலுவலர்கள் கொண்ட ஒரு கூட்டுக் குழு, பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை கள ஆய்வு செய்து, பதிவுப் புத்தகத்தில் விவரங்களைப் பதிவு செய்ய வேண்டும்.

சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலர், மின்வேலி அமைக்கப்பட உள்ள இடத்தை ஆய்வு செய்து சரிபார்த்த பிறகு, மின்வாரியத்துறை அதிகாரிகளுடன் விவரக்குறிப்புகளை சரிபார்த்து உரிய ஆய்விற்கு பிறகு ஒப்புதல், குறைப்பு அல்லது நிராகரித்து, விண்ணப்பத்தின் மீது 45 நாட்களுக்குள் முடிவெடுக்க வேண்டும். இந்த விதிகள் வெளியிடப்பட்ட தேதியில் ஏற்கனவே மின் வேலிகள் அமைத்துள்ள நில உரிமையாளர், இந்த விதிகள் வெளியிடப்பட்ட நாளிலிருந்து, அறுபது நாட்களுக்குள் பதிவுச் சான்றிதழைப் பெறுவதற்கு, மாவட்ட வன அலுவலரிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

அனுமதி கிடைத்தவுடன், சொத்தின் உரிமையாளர் அனுமதி பெற்ற நாளிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள் மின் வேலியை அமைத்து, உறுதிமொழியுடன் மின்வேலியை பதிவு செய்ய விண்ணப்பிக்க வேண்டும். வனத்துறை மற்றும் மின்சாரத்துறை அதிகாரிகள் குழுவின் கூட்டு ஆய்வுக்குப் பிறகு, மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை அமைக்கப்பட்டுள்ள மின் வேலி களின் தரம் மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும். இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

ஒட்டப்பிடாரம் தொகுதியில்

41 ஊராட்சிகளுக்கு மின்கல வாகனங்கள்!

எம்.சி.சண்முகையா எம்.எல்.ஏ. வழங்கினார்!

தூத்துக்குடி, ஜூலை 6 - தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 41 கிராம ஊராட்சிகளுக்கு தூய்மை பாரத இயக்கத்தின் மூலம் கிராம ஊராட்சிகளில் தூய்மை பணியாளர்கள் குப்பைகள் மற்றும் கழிவுகளை விரைவாக அப்புறப்படுத்துவதற்கு ஏதுவாக 77 மின்கல (ecart) துப்புரவு வாகனங்களை ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் திருமிகு எம்.சி.சண்முகையா அவர்கள் வழங்கினார். இதில் ஒட்டப்பிடாரம் யூனியன் சேர்மன் எல்.ரமேஷ், இந்நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் திரு.செந்தூர்மணி, ஒட்டப்பிடாரம் மன்ற தலைவர் இளையராஜா, மாவட்டப் பிரதிநிதி ஜோசப் மோகன், ஒன்றிய கவுன்சிலர்கள் நவநீதகிருஷ்ணன், திருமதி.கனகரத்தினம் சுகுமார், திருமதி. சித்ராதேவி சண்முகராஜ், வெள்ளசாமி, மணியாச்சி ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.பிரேமா, கொல்லங்கிணறு ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.லதா, பாஞ்சாலங்குறிச்சி ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.கமலாதேவி, கொடியங்குளம் ஊராட்சி மன்ற தலைவர் அருண்குமார், எப்போது வென்றான் ஊராட்சி மன்ற தலைவர் முத்துக்குமார், வேப்பலோடை ஊராட்சி மன்ற தலைவர் திருமதி. வேல்கனி, குலசேகர நல்லூர் ஊராட்சி மன்ற தலைவர் வேலாயுதசாமி மருதன்வாழ்வு ஊராட்சி மன்ற தலைவர் திருமதி. வள்ளியம்மாள், கீழக்கோட்டை ஊராட்சி மன்ற தலைவர் சதீஷ்குமார், தருவைகுளம் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.காடோடி, பாறைகுட்டம் ஊராட்சி மன்ற தலைவர் மாடசாமி, ஆரைக்குளம் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி. சங்கரி செல்வம் மற்றும் தூய்மை பணியாளர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சேந்தமங்கலம் (தேர்வுநிலை) பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம்
ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை
ந.க.எண்.234/2023 நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (NSMT) : 2023–2024 நாள்.28.06.2023

வ.எண்	வேலையின் பெயர்	மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில்	செலுத்த வேண்டிய தொகை: முன் வைப்புத் தொகை (ரூபாயில்) 1 சதவீதம்	செலுத்த வேண்டிய தொகை: ஒப்பந்தப் புள்ளி படிவம் விலை வரியுடன்	ஒப்பந்த தாரரின் தகுதி	வேலையை செய்து முடிக்க வேண்டிய காலம் (வேலை உத்தரவு தேதி முதல்)
1.	வார்டு எண்.1,3,5,11,12 மற்றும் 13 குறுக்கு தெருக்களில் தார்சாலை சீரமைப்பு செய்தல்.	179.00	1,79,000	17700	Class-I	6 மாதங்கள்
2.	வார்டு எண்.5,8,9.10,11,12,13,14,15,16 மற்றும் 17 குறுக்கு தெருக்களில் சிமெண்ட் சாலை சீரமைப்பு செய்தல்.	110.00	1,10,000	17700	Class-I	6 மாதங்கள்

சேந்தமங்கலம் பேரூராட்சி 2023-24–ம் ஆண்டு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் (NSMT) மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு உறைகள் (Two cover System) கொண்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. சேந்தமங்கலம் தேர்வுநிலை பேரூராட்சியின் செயல் அலுவலர் (அ) அவரால் அங்கீகரிக்கப்பட்டவரால் 13.07.2023 வியாழக்கிழமை பிற்பகல் 03.00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 14.07.2023 வெள்ளிக்கிழமை பிற்பகல் 03.30 மணிக்கு அப்போது வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் பரிசீலிக்கப்படும். 1. ஒப்பந்தப்புள்ளி சம்பந்தப்பட்ட நிபந்தனைகளை சேந்தமங்கலம் தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்தில், அலுவலக வேலை நாட்களில், அலுவலக வேலை நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம். 2. ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 13.07.2023 ஆம் தேதி பிற்பகல் 03.00 மணிக்குள் பேரூராட்சி அலுவலகத்தில் தொகை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம் அல்லது https://tntenders.gov.in என்ற வலைதள முகவரியிலிருந்து இலவசமாக பதிவிற்கும் செய்து கொள்ளலாம்.

செயல் அலுவலர், சேந்தமங்கலம் பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம்.

செ.ம.தொ.இ./3390/ஒப்பந்தப்புள்ளி/2023 "சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை
கட்டடம் (க & பரா) வட்டம், மதுரை- 625 002.
(விலை விகித முறை)
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 3 க.பொ. / க (க & ப) வட்டம், மதுரை / 2023-2024 / நாள். 03.07.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் கண்காணிப்புப்பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்ட (க & ப) வட்டம், மதுரை அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து எட்டு பணிகளுக்காக மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1	எட்டுப்பணிகளுக்கான விபரம், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை அணுகவும்.	
2	ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள்	07.07.2023 முதல் 21.07.2023 மாலை 3.00 மணி வரை
3	ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம்	21.07.2023 மாலை 3.00 மணி வரை
4	ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்	24.07.2023 காலை 11.00 மணி முதல்

கண்காணிப்புப் பொறியாளர், பொபது, கட்டடம் (க & பரா) வட்டம், மதுரை.2.
செ.ம.தொ.இ./ 3373 / ஒப்பந்தப்புள்ளி / 2023 "சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

தமிழ்நாடு அரசு
உத்தரமேரூர் சிறப்பு நிலை பேரூராட்சி, காஞ்சிபுரம் மாவட்டம்
ந.க.எண்.283 / 2021 / அ1 மறுஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள். 26.06.2023
தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 43.1998 மற்றும் விதிகள் 2000ன் கீழ்
காஞ்சிபுரம் மாவட்டம், உத்தரமேரூர் பேரூராட்சிக்காகவும், அதன் சார்பாகவும், 2022-2023 ஆம் ஆண்டு அம்ருத் 2.0 திட்டம் 2022-23 (AMRUT 2.0) கீழ் குடிநீர் திட்டப்பணிகள் மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து 21.07.2023 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை நேரிலோ அல்லது அஞ்சல் மூலமோ பேரூராட்சியின் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் நிறைவு செய்யப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும். மேலும் e-tender முறையில் https://tntenders.gov.in என்ற இணையதளத்திலும் பிற்பகல் 3.00 மணி வரை ஒப்பந்தப்புள்ளிகள் அளிக்கலாம். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 21.07.2023 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு வருகை தந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையிலும் மற்றும் https://tntenders.gov.in என்ற இணையதளத்திலும் திறக்கப்படும். இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி நமூனா படிவங்கள் 21.07.2023 பிற்பகல் 3.00மணி வரை http://www.tntenders.gov.in மற்றும் www.tenders.tn.gov.in/publish என்ற இணையதளத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் இப்பேரூராட்சி அலுவலகத்தில் கீழ்காணும் விவரப்படி நமூனா கட்டணம் 20.07.2023 பிற்பகல் 3.00 மணிக்குள் செலுத்தி நமூனா படிவம் பெற்றுக்கொள்ளலாம்.

வ. எண்.	பணியின் விபரம்	மதிப்பீடு (ரூ.)	முன் வைப்புத் தொகை (ரூ)	ஒப்பந்தப்புள்ளி நமூனா ரூ.	பணி காலம்
1.	உத்தரமேரூர் பேரூராட்சியில் குடிநீர் திட்ட மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல்	20.90.00.000/-	20.90.000/-	16.800/-	365 நாட்கள்

செயல் அலுவலர் உத்தரமேரூர் சிறப்பு நிலை பேரூராட்சி. காஞ்சிபுரம் மாவட்டம்.
செ.ம.தொ.இ./ 3393 / ஒப்பந்தப்புள்ளி / 2023 "சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம். சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

தமிழ்நாடுஅரசு **நெடுஞ்சாலைத்துறை**
திருநெல்வேலி (நெ) நபார்டு மற்றும் கிராமச்சாலைகள்வட்டம்
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 06 /2023–2024/வ1 / நாள். 03.07.2023
தமிழ்நாடுஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர் (நெ), நபார்டு மற்றும் கிராமச்சாலைகள்வட்டம், திருநெல்வேலி அவர்களால் அரசு ஆணை (Ms) எண். 7 நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் (EAP.II(2)) துறை, நாள். 30.01.2023 RIDF XXVIII- ன்படி நபார்டு கடனுதவியில் அனுமதிக்கப்பட்ட 2022–2023 ஆம் ஆண்டிற்கான 158 பாலங்கள் கட்டுதல் / திரும்பக்கட்டுதல் திட்டத்தின் கீழ் பரமக்குடி (நெ) நபார்டு (ம) கிராமச்சாலைகள் கோட்டத்திற்கான ஒரு பால பணிக்கு மூடி முத்திரையிடப்பட்ட இனவாரி விலை ஒப்பந்தப்புள்ளிகள் இரு உறைமுறை இணையவழியில் மட்டுமே 10.08.2023 அன்று 15.00 மணி வரை வரவேற்கப்படுகிறது.
பணியின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்பு தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள், முக்கிய நிகழ்வுகளின் நேரமும் தேதியும் மற்றும் அனைத்து இதர விபரங்களும் https://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் 14.07.2023 முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் ஏற்படின் அவைகள் அனைத்தும் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.
செ.ம.தொ.இ./3372/ஒப்பந்தப்புள்ளி/2023
கண்காணிப்புப் பொறியாளர் (நெ), நபார்டு (ம) கிராமச் சாலைகள்வட்டம் திருநெல்வேலி–2.
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

கூடலூர் நகராட்சி – தேனி மாவட்டம்
ந.க.எண்.0926/2023/இ1 (குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு) நாள் : 04.07.2023
மாநில நிதிக்குழு திட்டம் (SFC) 2023-24–ன் திட்டத்தின் கீழ்கண்ட பணிக்கு கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ்க்கண்ட சாலை பணிக்கு கூடலூர் நகராட்சி (தேனி மாவட்டம்) ஆணையர் மூலம் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வலைத்தளத்தின் வாயிலாக இரண்டு உறை முறையில் வரவேற்கப்படுகிறது.

வ. எண்	பணியின் பெயர்	மதிப்பீடு தொகை (இலட்சத்தில்)	ஒப்பந்தப் புள்ளி படிவம் கிடைக்கும் விபரம்	ஒப்பந்தப் புள்ளி திறப்பு விபரம்	பணி செய்து முடிக்க வேண்டிய காலம்
1.	Improvement of B.T Surface at Ambedcar colony (123021R292), ACF Colony street (123021R283), Anjalaga street (123021R284), 2E Type Colony street (123021R285), 2E Type Colony street (123021R286), 2 F Type Colony First street (123021R287), 2 F Type Colony First street 2 (123021R289) Pallivasal street 3 Unicode (123005R120), 2 G Type colony street 1 (123021R304), 2 G Type colony street 3 (123021R306), Water tank Road 9 (123010R195) and Kallar East Pudhu Street1 (123002R049) road in Gudalur Municipality.	ரூ.91.00	04.07.2023 (முற்பகல் 11.00 மணி முதல்)	14.07.2023 பிற்பகல் 3.30 மணிக்கு	6 மாதங்கள்

ஒப்பந்தப்புள்ளி கலந்தாய்வு நாள் 06.07.2023 காலை 11.00 நகராட்சி அலுவலகம் கூடலூர். ஒப்பந்தப்புள்ளி விபர அட்டவணை மற்றும் நிபந்தனைகள் அடியில் கண்ட இணைய தளங்களில் 04.07.2023 பிற்பகல் 3.00 மணி முதல் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். http://tntenders.gov.in ஒப்பந்தப்புள்ளிகளுக்கான முன் வைப்புத்தொகை பணி மதிப்பீட்டில் 1(ஒரு) சதவிகிதம் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து அனுப்பவேண்டும். மின்னணு ஒப்பந்தத்திற்கு முன்வைப்புத் தொகையை வங்கி வரைவோலையாக தனி உறையில் வைத்து ஒப்பந்தப்புள்ளி பெட்டி மூடுவதற்கு முன்பாக ஒப்பந்தபுள்ளி பெட்டியில் சமர்ப்பிக்கவேண்டும். நகராட்சி ஆணையருக்கு எந்தவித ஒப்பந்தபுள்ளியையும் ஏற்கவோ மறுக்கவோ முழு அதிகாரம் உண்டு. ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் விடுமுறையாக அறிவிக்கும்பட்சத்தில் அடுத்த வேலை நாளில் அதே நேரம் ஒப்பந்தபுள்ளி திறக்கப்படும். இதர விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய மின்னஞ்சல் முகவரி: commr.gudalur-mdu@tn.gov.in. 04554-231236
செ.ம.தொ.இ/ 3423 /ஒப்பந்தப்புள்ளி/2023
ஆணையாளர், கூடலூர் நகராட்சி.
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

பெருநகர சென்னை மாநகராட்சி
இயந்திர பொறியியல் துறை
இ.பொ.து.ம.வா.ப.ந.க.எண்.சி1 / 309 / 2023 குறுகிய கால மின்னணு ஒப்பம்
கீழ்கண்ட பணிக்கு மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) அவர்களால் குறுகிய கால மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது. (ஒப்ப விதிகளின்படி)

கோப்பு எண்.	பணியின் விவரம்	முன் வைப்பு தொகை
சி1/309/2023	பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 08, லாரி நிலையத்திற்கு 365 நாட்களுக்கு 18